**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**<u>C.C.No. 206 of 2023</u>**

அரசுதரப்பு **10 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கணபதி | வயது | : 44 |
| தந்தை பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : பெரம்பை | ஜாதி | :-------- |
| தாலுக்கா | : வானூர் | சமயம் | : |
| மாவட்டம் | : விழுப்புரம் | மொபைல் | : 94448 00023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 21.07.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(<u>எதிரி முன்னிலை**.** வழக்கறிஞர் முன்னிலை</u>

<u>முதல் விசாரணை</u>**:**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் பாச்சல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 29.07.2022 அன்று திருப்பாபுலியூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது தலைமை காவலர் 1572 சத்தியமூர்த்தி என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.514/2022 பிரிவு 279, 337 இதச வழக்கினை நான் புலன் விசாணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் அன்றைய தினம் 21.30 மணிக்கு சென்று சாட்சிகள் சண்முகம், கணேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **<u>அ.சா.ஆ.8</u>** ஆக குறியீடு செய்யப்பட்டது. பின்னர் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், சாட்சிகள் கிள்ளிவளவன், ராஜ்குமார், சதீஷ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்தில் காயம்பட்டு ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த ஷேன் என்பவர் 29.07.2022 அன்று 21.25 மணிக்கு இறந்துவிட்டதாக 30.07.2022 அன்று காலை 01.30 மணிக்கு தகவல் கிடைத்ததால் வழக்கின் சட்ட பிரிவை 279,

337 இதச-லிருந்து 279, 337, 304(A) இதச ஆக சட்ட பிரிவு மாற்றம் செய்து வழக்கின் மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சட்டப் பிரிவி மாற்று அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்பட்டது. பின்னர், ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:**

கடலூர் சீமாட்டி சிக்னல் என்பதும், கடலூர் K.V. Tex சிக்னல் என்பதும் வெவ்வேறு இடம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு இடத்திற்கும் இடையில் சுமார் 400 மீட்டர் இருக்கும். K.V. Tex சிக்னலிலிருந்து K.V. Tex துணி கடை சுமார் 50 முதல் 100 அடிக்குள் இருக்கும் என்றால் 100 அடி இருக்கும். சிதம்பரம் to கடலூர் செல்லும் சாலை divider மூலம் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் புகாரில் கடலூர் சீமாட்டியிலிருந்து K.V. Tex சென்று என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேலும், புகாரில் K.V. Tex சென்று எங்கள் ஊர் போவதற்காக சாலையின் வலது புறமாக திரும்பி K.V. Tex சிக்னலிலிருந்து வண்டிப்பாளையம் போகும் சாலையில் சென்றதாக குறிப்பிட்டுள்ளார், சாலையில் தவறான பாதையில் சென்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் K.V. Tex முன்பு உள்ள சாலையை கடந்து வண்டிப்பாளையம் ரோட்டில் செல்லும் போது விபத்து ஏற்பட்டுள்ளது. K.V. Tex சிக்னல் என்பது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். சாட்சிகள் ராஜ்குமார், சதீஷ் ஆகியோர் இறந்தவரின் உறவினர்கள் என்றால் ஒரே ஊர்க்காரர்கள். அ.சா.1 மது போதையில் வாகனத்தை ஓட்டி தவறான பாதையில் சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும், நஷ்டஈடு பெறுவதற்காக பொய்யான புகாரை பெற்று தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனம் சம்பவ இடத்தில் இருந்ததா என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் சம்பவ இடத்திற்கு நான் செல்லும் போது வாகனம் அங்கு இல்லை. ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை**:** இல்லை